## கழகத்தவர்கள் எண்ணங்களின் சுமை தாங்கியாக –

# சிந்தனையாளர்களின் திசை வழி காட்டியாக விளங்கியவர் 'முரசொலி செல்வம்'!



பெங்களூரில் தன்னுடைய இல்லத்தில் கிஞ்சிற்றும் எதிர்பாராத வகையில் "முரசொலி" கழக நாளிதழுக்கு எழுதுவதற்கு முன் சற்று ஓய்வெடுக்க சென்ற ஆருயிர் நண்பர் முரசொலி செல்வம் தன் வாழ்க்கை அத்தியாயத்தின் எஞ்சிய பகுதியை எழுதிமுடித்து நிரந்தர ஓய்வெடுத்து விட்டார் என்ற செய்தி 10.10.2024 ஆம் தேதி வெளிவந்த நிலையில், கோடிக்கணக்கான கழகத் தோழர்கள் திகைப்பில் ஆழ்ந்து, ஆறாத் துயரத்தில் மூழ்கினர். கழகத்தவர்களின் நிலைமை இதுவெனில், அவரது துணைவியார், மறைந்த முத்தமிழறிஞர் கலைஞரின் செல்வ மகள் செல்வியின் நிலை எப்படி இருந்திருக்கும் எனக் கற்பனை செய்து கூட பார்க்க இயலவில்லை.

அதுமட்டுமல்ல; தமிழ்நாடு முதல்வரின் உறவுமுறைக்கு முரசொலி செல்வம் அத்தான் எனினும், முதல்வரால் "குட்டி அத்தான்" என்று அழைக்கப்பட்டவர்தான் முரசொலி செல்வம் அவர்கள். தனது நெடிய அரசியல் பயணத்தில் சரியான கொள்கை வழிகாட்டியாக விளங்கிய பெருமைக்குரியவர்தான் முரசொலி செல்வம் என்றால் அது எவ்வகையிலும் மிகையான கூற்றல்ல. மேலும், "உங்களில் ஒருவன்" என்ற முரசொலிக் கடிதத்தில் "நான் ஆற்றிக்கொள்வதற்கும், என்னை தேற்றிக் கொள்வதற்கும் உரிமையோடு சாய்ந்த முரசொலி செல்வத்தின் தோள்கள் சரிந்து விட்டதே" என ஆற்றொணா துயரத்தை வெளிப்படுத்திவிட்டு, முதல்வர் அவர்கள். அதேநேரத்தில் மழை வெள்ளத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற அடிப்படை கட்டமைப்புகளுக்கு ஓய்வின்றி ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். இதற்கிடையில் திருவள்ளூருக்கு அருகில் ஏற்பட்ட இரயில் விபத்தால் காயமடைந்தவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்கும் பணியையும் மேற்கொண்டார்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

தமிழ்நாடு முதல்வருக்கு ஒரே நேரத்தில் உருவான எதிர்பார்க்க முடியாத சோக நிகழ்வுகளை, "எதையும் தாங்கும் இதயத்தை" பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியவர்களிடமிருந்து பெற்றக் காரணத்தினால் இந்த சோக நிகழ்வுகளை எதிர்கொள்ள முடிகிறது என்றுதான் எண்ணிடத்தோன்றுகிறது. மறைந்த முரசொலி செல்வம் எங்களோடு சட்டக் கல்லூரியில் பயின்றவர், படிக்கின்ற காலகட்டங்களில் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழிகாட்டியாக விளங்கியவர், மட்டுமல்லாமல் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழ்நாடு முழுமையும் உருவாக்குவதற்கும், மாணவர்கள் அமைப்புகளின் அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கும், தீவிரப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டதோடு, சிறந்த வழிகாட்டியாகவும், சிந்தனையாளராகவும், மாணவர்களால் போற்றப்பட்டவர், பாராட்டப்பட்டவர் என்பதை நாங்கள் அறிவோம்.

கழக மாணவர் இயக்கத்தை வளர்த்தவர் என்பதோடு மட்டுமல்லாமல், தலைசிறந்த பத்திரிக்கையாளர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார். முரசொலி ஆசிரியராகவும் பணியாற்றினார். முரசொலி செல்வத்தின் அரசியல் விமர்சனப் பெட்டிச் செய்திகள் முரசொலி வாசகர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்த பகுதியாகும். எந்தப் பத்திரிகையாளருக்கும் ஏற்படாத ஓர் சிறப்பு நிகழ்வு இவரது பத்திரிக்கைத் துறை வாழ்க்கையில் நிகழ்ந்தது. சட்டமன்றத்தினுடைய உரிமைகளை மீறினார் என்று குற்றம் சாட்டப்பட்டு சட்டமன்றத்தில் சபாநாயகருக்கு எதிரே சபை உரிமைகளை மீறிய குற்றவாளியாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டார். அப்பொழுதும் அவர் கூண்டில் நிறுத்தப்பட்ட அரிமாவாக நெஞ்சுயர்த்தி கம்பீரக் குரலில் தன் கருத்தினை சபைமுன் வைத்தார்.

ஓர் பத்திரிக்கையாளன் என்ற முறையில் உணமைகளை கொண்டுசேர்த்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி உருவாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தனக்கு உண்டு என தொடங்கி, தொடர்ந்து வாதிட்டு கூண்டிலிருந்து விடுவிக்கப்பட்ட அரிமாவென வெளியே வந்த தனித்த சிறப்பும், பெருமையும் மறைந்த என் ஆருயிர் நண்பர் முரசொலி செல்வத்தையே சாரும். முரசொலி செல்வம் அவர்கள் திராவிட இயக்கத்தினுடைய கருத்துகளை பல்வேறு வடிவங்களில் முரசொலி இதழ் மூலமாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பார். பெட்டிச் செய்திகள் மூலம் அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு விளக்கம் அளிப்பார். மக்களையும் விழிப்புணர்வு கொள்ளச் செய்வார். அரசியல் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அவர் எழுத்துகள் பல்வேறு வடிவம் பெறும். சில நேரம் உரையாடல்களாகவும், சில நேரம் நாடகக் கதாபாத்திரங்களாகவும் உருவகப்படுத்தி, அரசியல் கருத்துக்களை சாமானிய மக்களும் விளங்கிக் கொள்ளத் தக்களவில் வெளிப்படுத்துவார்.

சில நேரங்களில் அரசியல் சூழ்நிலைகளை விளக்கி, அதை மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக திரைப்படப் பாடல்களையே தலைப்பாக்குவார். எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு கொஞ்சம் சூடாகவும், காரமாகவும் முரசொலியின் பதில்கள் இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினால், ஆம்! எதிர்பார்த்தால் முரசொலி செல்வத்தின் கட்டுரைகள் "சிலந்தி வடிவம்பெறும்" . கழகத் தோழர்களும், கட்சியின் அனுதாபிகளும், கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் கூட "சிலந்தி" கட்டுரையைப் படிக்க தவறுவதில்லை என்பதை நான் அறிவேன்.

நான் தொடர்ந்து சிலந்தியின் கட்டுரைகளைப் படித்துவிட்டு மறைந்த என் ஆருயிர் சகோதரர் முரசொலி செல்வத்தோடு கட்டுரைகள் குறித்து பேசுவேன். அந்த நினைவலைகள் என் உள்ளத்தில் ஓய்ந்திடவில்லை. மாறாக கடல் அலைபோல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த முரசொலி செல்வத்தைப் போல் இன்னொரு செல்வத்தை நான் காணவியலாது, ஆனால் அந்த செல்வத்தின் நினைவலைகள் மட்டும் ஓயாது தொடரும், தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

ஆம்! என் இதயத்துடிப்பில் இரண்டறக்கலந்து ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரண முகாம்ங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் நிவாரண முகாம்களில் சந்தித்து தேவையான நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி ஆ.சத்தியவேலு, கே.வி. லோகேஷ், ஜெயலலிதா சசிதரன், எல்.எஸ். சுரேஷ், ஜி.சுமன், எம்.அருள், தொழிலதிபர் கே.வி. நாகராஜ், ஏ.வி.சசிதரன், யசோதா, ஊராட்சி மன்ற தலைவர் மதன், குப்பன், பழனி, தியாகராஜன், தினேஷ், குடியரசு, போண்டா சிவா, பார்த்திபன், முகிலன், ஒன்றிய பொறியாளர் நரசிம்மன் வட்டார வளர்ச்சி அலுவலார் சிவகுமார், வட்டார மருத்துவ அதிகாரி சங்கீதா, பணி பார்வையாளர் நாகேஷ்வராவ், கே.வி.ரவி உள்ளிட்ட கழக தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! நே.சிற்றரசு தலைமை!

# ஆர்.என்.துரை தாயார் ஆர்.கண்ணம்மாள் படத்திறப்பு!

## துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைக்கிறார்!



சென்னை, அக்.16-

சென்னை மேற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் லயன் ஆர்.என். துரையின் தாயாரும் - திருவல்லிக்கேணி பகுதிக் கழக முன்னோடி மறைந்த பி.ஜி. ரங்கநாதனின் துணைவியாருமான மறைந்த ஆர். கண்ணம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்வு நாளை (17-10-2024 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை-இராயப்பேட்டை - வி.எம். தெரு, வி.பி.இராமன் (இலாயிட்ஸ்) சாலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தலைமை வகிக்கிறார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தயாநிதி மாறன் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், டாக்டர் அ.சுபேர்கான், து. விக்டர், வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ச.யோகேஸ்வரி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அன்னாரின் திருவுருவப்படத் தைத் திறந்து வைக்கிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., எம்.மோகன் எம்.எல்.ஏ., டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., ஜெ.ஹெலன் டேவிட்சன், நாமக்கல் பா.ராணி, திருமதி விஜயா தாயன்பன், குமரி விஜயகுமார், கே.ஆர். இராமசாமி, சி.கே.சேகர் மற்றும் ந.இராமலிங்கம், எஸ்.மதன்மோகன், மா.பா. அன்புதுரை, ச.பரமசிவம், எம்.கே.வி.வினோத், வி.பி. பொன்னரசு, வி.என்.ராஜன், நுங்கை வி.வி.மணி, எஸ்.ஏ.எஸ். ஹபீஸ்புல்லா, பா.பிரகாஷ், கே.திருநா வுக்கரசு, வே.கமலாசெழி யன், ரவிராஜ்குமார், ஏ.விஜயராஜ், இ.இளம்பரிதி, வி. ஆர்.விஜய், ச.அசோக்குமார், எம்.கே.ஆனந்த், டி. லதா பிளாரன்ஸ், சி.ஆறுமுகம் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

## கும்முடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியத்தில்

# மழை வெள்ள நிவாரண முகாம்களில் ஆய்வு!

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. நிவாரண உதவிகள் வழங்கினார்!

திருவள்ளூர், அக். 17-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள்நிவாரணமுகாம்ங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் நிவாரண முகாம்களில் சந்தித்து அங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண பொருட்கள் குறித்தும் ஆய்வு செய்தார்.

எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் குமரப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கட்டிடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 33 நபர்கள் மற்றும் பாலவாக்கம் ஊராட்சி ஜெ. ஜெ.நகர் சமுதாய கூடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 90 நபர்கள், எல்லாபுரம் தெற்கு ஒன்றியம் திருக்கண்டலம் ஊராட்சி அண்ணா நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி யில் தங்க வைக்கப்பட்டுள்ள 128 நபர்களுக்கு தேவையான பாய், தலையனை, அரிசி, போர்வை மளிகை பொருட்கள். ரொட்டி மற்றும் உணவு பொருட்களை வழங்கினார். பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருமாறு அரசு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

உடன் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி ஆ.சத்தியவேலு, கே.வி.லோகேஷ், ஜெயலலிதா சசிதரன், எல்.எஸ். சுரேஷ், ஜி.சுமன், எம். அருள், தொழிலதிபர் கே.வி.ஜி.நாகராஜ், ஏ.வி.சசிதரன், யசோதா, ஊராட்சி மன்ற தலைவர் மதன், குப்பன், பழனி, தியாகராஜன், தினேஷ், குடியரசு, போண்டா சிவா, பார்த்திபன், முகிலன், ஒன்றிய பொறியாளர் நரசிம்மன் வட்டார வளர்ச்சி அலுவலார் சிவகுமார், வட்டார மருத்துவ அதிகாரி சங்கீதா, பணி பார்வையாளர் நாகேஷ்வராவ், கே.வி.ரவி உள்ளிட்ட கழக தோழர்கள்; பங்கேற்றனர்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ. / கொ & நி / வ.செ.அ.மி.நி | 79, 80 | 2 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/4332/ஒப்பந்தப்புள்ளி/2024


## 104 (ஆ) வட்டக் கழகச் செயலாளர்

# ஜெ.தங்கராஜ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, அக். 17-

வில்லிவாக்கம் மேற்குப் பகுதி 104 (ஆ) வட்டக் கழகச் செயலாளர் ஜெ.தங்கராஜ் (வயது 63) நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி அண்ணா நகர் மேற்கு 20வது மெயின்ரோடு 157/32 தீபம் பிளாட்டில் வசித்து வந்தவர் ஜெ.தங்கராஜ் இவர் வட்டக் கழகச் செயலாளராக திறம்பட பணிபுரிந்து வந்தார். இவர் திடீரென நேற்று இயற்கையெய்தினார்.

இச்செய்தியறிந்ததும் கழக முன்னணியினரும் கழகத் தோழர்களும் அன்னாரது இல்லம் சென்று மறைந்த ஜெ.தங்கராஜ் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் இன்று (17.10.2024) பிற்பகல் வில்லிவாக்கம் சிட்கோ இன்டஸ்டரியல் எஸ்டேட் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.


# 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

## மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



"எறும்பனையர் எம் மறவர் இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

.............. என்றும் உங்கள் வழியில் பேரன் ..............

**மன்னை த.சோழராஜன் B.E.,**
நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி
( மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் )